Crime No: 1/2026

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318782

1. District : மாவட்டம் Chennai. PS: காவல்நிலையம் VAC CSUI Year: ஆண்டு 2026 FIR No.: முத.அ. எண் 1/AC/2026/CCI Date: நாள் 11.06.2026

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Prevention of corruption Act 1988 (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: BNSS (106) Sections பிரிவுகள்: 7.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் 04.06.26 Date from : நாள் முதல் 04.06.26 Date to : நாள் வரை 04.06.26
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 15.30hrs Time to : நேரம் வரை 21.15hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.06.26 Time : நேரம் 21.30 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Konnur SRO office, 39/6, Thiruvallur High road, Puduchatram post Poonamallee road Ambattur. Chennai. 18 Km approximately North west.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. N. Arivazhagan, Deputy Inspection cell officer, Zonal deputy Tahsildar Tondiarpet Chennai-81
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில்
(g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. N. Anand. S/o S. Nagamathan, SRO Konnur. No 39/6 Thiruvallur High road, puduchatram post Ambattur Chennai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
Does not arise.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Given in Separate Sheet enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் ~~ நகல் ஒன்று~~ இலவசமாக கொடுக்கப்பட்டது.

N. 11/6/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 11.06.2026 at
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 13.45 hrs.

Name: பெயர் K. VALARMATHI
Rank: நிலை INSPECTOR OF POLICE
No.எண்
CSUI
DVAC

Chennai, Vigilance and Anti-corruption, City Special Untit-I office containing the complaint FIR in Cr.No.1/AC/2026/CC-I Continuation (Column-12):-

காவல் ஆய்வாளர் திருமதி.K.வளர்மதி ஆகிய நான் இன்று 04.06.2026-ம் தேதி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகர சிறப்பு பிரிவு-1-ல் பிற்பகல் சுமார் 21.30 மணிக்கு சென்னை தண்டையார்பேட்டை திரு.N.அறிவழகன், துணை ஆய்வு குழு அலுவலர்/ மண்டல துணை வட்டாச்சியர், தண்டையார்பேட்டை வட்டம், சென்னை - 600 081. அவர்கள், கொடுத்த புகார் மனு பின்வருமாறு அனுப்புனர் திரு.N.அறிவழகன், துணை ஆய்வு குழு அலுவலர்/மண்டல துணை வட்டாச்சியர், தண்டையார்பேட்டை வட்டம், சென்னை-81 .பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, நகர சிறப்பு பிரிவு - 1 ஆலந்தூர், சென்னை-16 Proceeding No.98/Inpn/2026 Dated: 04.06.2026 நாள் 04.06.2026 அம்மா, சென்னை - 600 053, கொன்னூர், சார்பதிவாளர் அலுவலகத்தில் சென்னை-16, ஆலந்தூர், நகர சிறப்பு பிரிவு-1 காவல் ஆய்வாளர் ஆகிய தாங்கள் குழுவினருடன் நான் இணைந்து மேற்கொண்ட திடீர் கூட்டுத் தணிக்கை 04.06.2026 அன்று பிற்பகல் 15.30 மணி முதல் இரவு 21.15 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி தணிக்கையின் போது கணக்கில் வராத தொகை ரூ.84,000/- (ரூபாய் எண்பத்தி நான்காயிரம் மட்டும்) கைப்பற்றப்பட்டது, அலுவலக ஆவணங்கள் மற்றும் நபர்களிடம் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவை 04.06.2026 அன்று இரவு சுமார் 21:15 மணிக்கு காவல் ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, நகர சிறப்பு பிரிவு-1 அவர்களிடம் மேல் நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்பட்டது. இதன் தொடர் நடவடிக்கை குறித்து தெரிவிக்குமாறு கனிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. தங்கள் நம்பிக்கைக்குரிய, Sd.XXXX (N.அறிவழகன்) துணை ஆய்வு குழு அலுவலர்/மண்டல துணை வட்டாச்சியர், தண்டையார்பேட்டை வட்டம், சென்னை மாவட்டம். திடீராய்வின் செயல்முறை விவரம் பின்வருமாறு.

சென்னை, துணை ஆய்வு குழு அலுவலர்/மண்டல துணை வட்டாச்சியர், தண்டையார்பேட்டை வட்டம் மற்றும் சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை சிறப்பு பிரிவு-1 காவல் ஆய்வாளர் தலைமையிலான குழுவினர் இணைந்து இன்று 04.06.2026-ம் தேதி சென்னை - 600 053, கொன்னூர், சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டு ஆய்வு அறிக்கை.

இருதுறை கூட்டு ஆய்வு மேற்கொண்ட அலுவலர்கள்:	1.	திரு.N.அறிவழகன், துணை ஆய்வு குழு அலுவலர்/ மண்டல துணை வட்டாச்சியர், தண்டையார்பேட்டை வட்டம், சென்னை - 600 081.
	2.	திருமதி.K.வளர்மதி, காவல் ஆய்வாளர், நகர சிறப்பு பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16.
	3.	திருமதி.M.சசிரேகா, காவல் ஆய்வாளர், சிறப்பு புலனாய்வு பிரிவு-2, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16.
	4.	திருமதி.M.பிரியா, காவல் ஆய்வாளர், சென்னை நகர பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16.

சென்னை - 600 053, கொன்னூர், சார்பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் ஆவணங்கள் பதிவு செய்வதற்கும் மற்றும் வில்லங்க சான்றிதழ்கள் பெறுவதற்கும், திருமணம் பதிவு செய்வதற்கும் லஞ்சம் வாங்குவதாக கிடைத்த நம்பகமான தகவல் அடிப்படையில், சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அதன் அடிப்படையில், மேற்படி சென்னை - 600 053, கொன்னூர், சார்பதிவாளர் அலுவலகத்தில் இருதுறை கூட்டு ஆய்வு நடத்திட முடிவு செய்து, இன்று 04.06.2026ந் தேதி மாலை சுமார் 15.30 மணியளவில் சென்னை, துணை ஆய்வு குழு அலுவலர்/மண்டல துணை வட்டாச்சியர், தண்டையார்பேட்டை வட்டம், திரு.N.அறிவழகன் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நகர சிறப்பு பிரிவு-1, காவல் ஆய்வாளர் தலைமையிலான குழுவினர் இணைந்து இருதுறை கூட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

2) மேற்படி கொன்னூர், சார்பதிவாளர் அலுவலகமானது வில்லிவாக்கம் யூனியன் அலுவலக வளாகத்தில், கொன்னூர், சென்னை - 600 053 என்ற முகவரியில் அம்பத்தூர் கொன்னூர், சார்பதிவாளர் அலுவலகத்திற்கு கிழக்கில் மேற்கு நோக்கி முதல் தளத்துடன் கட்டிடம் அமைந்துள்ளது. சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ளே நுழைந்தும், இடது புறம் வடக்கு நோக்கி சார்பதிவாளர் இருக்கையில் சார்பதிவாளர் இருந்தார். அவரிடம் சென்னை, துணை ஆய்வு குழு அலுவலர்/மண்டல துணை வட்டாட்சியர், தண்டையார்பேட்டை வட்டம் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நகர சிறப்பு பிரிவு-1, காவல் ஆய்வாளர் தலைமையிலான குழுவினர் அனைவரும் தங்களை அவரிடம் அறிமுகப்படுத்திக்கொண்டு, எங்களையும், எங்கள் உடைமைகளையும் சோதனை செய்துக்கொள்ளும்படி கேட்டபோது, பெருந்தன்மையுடன் அவர் வேண்டாம் என்று மறுத்துவிட்டார். மேலும், அவரை விசாரணை செய்ததில், தனது பெயர் திரு.என்.ஆனந்த், உதவியாளர்/சார்பதிவாளர் (பொறுப்பு) என்றும், 06.02.2026 முதல் பணியாற்றிவருவதாகவும் கூறினார். அதனை தொடர்ந்து, இருதுறை கூட்டு ஆய்வு மேற்கொண்ட போது, சார்பதிவாளர் அலுவலகத்தின், வலது புறம் முதல் தளத்திற்கு செல்ல கூடிய படிக்கட்டும், படிக்கட்டியின் கீழ் அலுவலக உதவியாளர் அமர்வதற்கு மேஜை இருக்கை அமைந்துள்ளது. அதனை தொடர்ந்து இருக்கைக்கு பின்புறம் இரண்டு கழிவறைகள் உள்ளன. இதனை சுற்றி கண்ணாடி தடுப்புகளுடன் கூடிய ஒரு அறை அமைக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இடது புறம் அமைந்துள்ள ஹாலில் வடக்கு நோக்கி சார்பதிவாளர் இருக்கை அமைந்துள்ளது. அதனை தொடந்து அவரது இருக்கைக்கு இடதுபுறம் பத்திரபதிவிற்கான புகைப்படம் எடுப்பவர் இருக்கையும், சார்பதிவாளரின் இருக்கைக்கு பின்புறம் கண்ணாடி தடுப்புகளுடன் கூடிய ஒரு அறை உள்ளது. அதில் இளநிலை உதவியாளர் இருக்கை உள்ளது. மேலும் இந்த அறையில் 5 கணினிகள் கொண்ட மேஜை இருக்கைகள் மற்றும் ஜெராக்ஸ் மிஷின் ஒன்று உள்ளது. மேலும் 15.30 மணியளவில் ஹாலில் உள்ள கேமரா மானிட்டரில் பார்த்த போது நேரமானது 15.13 என்று காண்பித்தது. இதன் மூலம் சரியான நேரத்திற்கும் கேமரா மானிட்டரில் உள்ள நேரத்திற்கும் சுமார் 17 நிமிடம் வேறுபாடு காணப்பட்டது. அதனை தொடர்ந்து முதல் தளத்தில் வடக்கு நோக்கி ஆவணங்கள் பாதுகாப்பு அறை உள்ளது. அவ்வறையை சோதனை செய்ததில், பணம் எதுவும் கைப்பற்றபடவில்லை. இதன் எதிரே இரண்டு கழிவறைகள் அமைந்துள்ளது.

3) மேற்படி அலுவலகத்தில் ஆய்வின் போது (1) திரு.N.ஆனந்த், ஆ/வ.43, த/பெ. S.நாகநாதன், உதவியாளர்/சார்பதிவாளர் (பொறுப்பு), கொன்னூர் அவர்களும், (2) திரு. R.சங்கரநாதன், ஆ/வ.37, த/பெ. P.ராமசாமி, இளநிலை உதவியாளர், (3) திரு. D.சதீஸ்குமார், ஆ/வ.34, த/பெ. A.துரைபாபு, IP Camera Operator (TCS Staff), (4) திரு.

S.வினோத், ஆ/வ.34, த/பெ. E.சேகர், Data Entry Operator (TCS Staff), (5) திரு. S.ஐயப்பன், ஆ/வ.24, த/பெ. சங்கரநாராயணன், Private Individual ஆகியோர் பணியில் இருந்தனர்.

4) மேற்படி உதவியாளர்/சார்பதிவாளர் (பொறுப்பு), திரு.N.ஆனந்த், சார்பதிவாளர் இருக்கையில் அமர்ந்திருந்தார். சார் பதிவாளர் திரு.N.ஆனந்த், அவர்களிடம் உள்ள பணம் குறித்து கேட்க தனது சட்டையின் இடது பக்க மேல் பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணி பார்த்த போது ரூ.630/- இருந்தது. பின்னர் அந்த பணம் குறித்து சார்பதிவாளர் திரு.N.ஆனந்த், அவர்களிடம் கேட்ட போது மேற்படி பணம் தனது சொந்த பணம் என்று தெரிவித்தார். இது குறித்து தனிநபர் பண இருப்பு பதிவேட்டை பார்வையிட்டதில், இன்றைய தேதியில் (04.06.2026) மேற்படி சார் பதிவாளர் திரு.N.ஆனந்த் தனது சொந்த பணம் ரூ.630/- என்று பதிவேட்டியில் பதிவு செய்யவில்லை. மேலும் மேற்படி பணம் சொந்த பணம் என்று கூறிய காரணத்தினை திருப்தி அடைந்ததால் அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

5) மேற்படி திரு. R.சங்கரநாதன், இளநிலை உதவியாளர், சார்பதிவாளர் இருக்கைக்கு பின்புறம் உள்ள கண்ணாடி தடுப்பு அறையில் அவரது இருக்கையில் அமர்ந்திருந்தார். திரு. R.சங்கரநாதன், இளநிலை உதவியாளர், அவர்களிடம் உள்ள பணம் குறித்து கேட்க தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணி பார்த்த போது ரூ.170/- இருந்தது. பின்னர் அந்த பணம் குறித்து திரு. R.சங்கரநாதன், இளநிலை உதவியாளர் அவர்களிடம் கேட்ட போது மேற்படி பணம் தனது சொந்த பணம் என்று தெரிவித்தார். இது குறித்து தனிநபர் பண இருப்பு பதிவேட்டை பார்வையிட்டதில், இன்றைய தேதியில் (04.06.2026) மேற்படி சார் பதிவாளர் திரு. R.சங்கரநாதன், இளநிலை உதவியாளர் தனது சொந்த பணம் ரூ.170/- என்று பதிவேட்டியில் பதிவு செய்யவில்லை. மேலும் மேற்படி பணம் சொந்த பணம் என்று கூறிய காரணத்தினை திருப்தி அடைந்ததால் அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

6) மேற்படி திரு.D.சதீஸ்குமார், IP Camera Operator (TCS Staff), திரு.S.வினோத், Data Entry Operator (TCS Staff), திரு.S.ஐயப்பன், Private Individual ஆகியோர்களை சோதனை செய்ததில் எந்த பணமும் இல்லை.

7) மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தின் உள்ளே நின்று கொண்டு இருந்த நபர்களில் ஒரு பெண்மணியை விசாரணை செய்ததில், அவரது பெயர் திருமதி.எம்.எஸ்.வித்யாஸ்ரீ, த/பெ.மேகநாதன் என்றும், எண்.106, SF-1, Sri Krisha Apartment, Kavi Arasu Street,

Thiruvallur – 602 001 என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், இன்று (04.06.2026) தனது தந்தை திரு.மேகநாதன் தனது இரு சகோதரர்களுக்கு செட்டில்மெண்ட் பதிவு செய்வதற்காக தன் குடும்பத்தாருடன் வந்ததாக தெரிவித்தார். மேலும் அவரை சோதனை செய்ததில், அவரது கைப்பையில் ரூ.2,00,000/- (இரண்டு இலட்சம் மட்டும்) இருந்தது. மேற்படி தொகையினை குறித்து விசாரணை செய்த போது, இத்தொகையானது தனது தந்தை கொடுத்தாக தெரிவித்தார். மேலும், இப்பணத்திற்கான சான்று ஆவணமாக GST Jewellery, காக்களூர், திருவள்ளுவர் மாவட்டம் என்ற நகைக்கடையில் சுமார் 16 கிராம் மதிப்புள்ள நகையை விற்று அதன் மூலம் ரூ.2,25,441/- வந்த தொகையில் ரூ.2,00,000/-த்தினை கொண்டு வந்ததற்கான இரசீதினை சமர்ப்பித்தார். மேலும், இது சம்மந்தமான வங்கி பரிவர்த்தனை ஆவணத்தையும் சமர்ப்பித்தார். இதனை பார்வையிட்டதில் திருப்திகரமாக இருந்ததால், மேற்படி ரூ.2,00,000/-த்தை அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

8) மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தின் உள்ளே, சார் பதிவாளர் இருக்கைக்கு எதிரே நின்று கொண்டு இருந்த ஒரு நபரை விசாரணை செய்ததில், அவரது பெயர் திரு.G. வெங்கடேசன், த/பெ கோவிந்தராஜ் என்றும், எண்,6, புதுத்தெரு, கருக்கு அம்பத்தூர், சென்னை 53 என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், இன்று (04.06.2026) ஆவணம் பதிவு செய்ய வந்ததாகவும், ரியல் எஸ்டேட் தொழில் செய்துவருவதாகவும் தெரிவித்தார். மேலும் அவரை சோதனை செய்ததில், அவரது பேண்ட் பாக்கெட்டில் ரூ.29,500/- (இருபத்தி ஒன்பாயிரத்து ஐநூறு மட்டும்) இருந்தது. மேற்படி தொகையினை குறித்து விசாரணை செய்த போது, இத்தொகையானது தனது சொந்த செலவிற்காக ATM லிருந்து எடுத்து வந்ததாக தெரிவித்தார். மேலும், இப்பணத்திற்கான சான்று ஆவணமாக ATM வங்கி பரிவர்த்தனை ஆவணத்தையும் சமர்ப்பித்தார். இதனை பார்வையிட்டதில் திருப்திகரமாக இருந்ததால், மேற்படி ரூ.29,500/-த்தை அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

9) மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தின் உள்ளே, சார் பதிவாளர் இருக்கைக்கு இடது பக்கத்தில் நின்று கொண்டு இருந்த ஒரு நபரை விசாரணை செய்ததில், அவரது பெயர் திரு.கோபால் தாஸ் முந்த்ரா, த/பெ. சத்தியதேவ் முந்ரா என்றும், No/ A/15, முகப்பேர் இன்டஸ்ரியல் எஸ்டேட், முகப்பேர், கிழக்கு, சென்னை -37 என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், இன்று (04.06.2026) ஆவணம் பதிவு செய்ய வந்ததாகவும், தொழில் அதிபராக உள்ளதாக தெரிவித்தார். மேலும் அவரை சோதனை செய்ததில், அவரது கைபையில் ரூ.35,800/- (முப்பத்தி ஐந்தாயிரத்து எட்டு நூறு மட்டும்) ஆஜர் செய்தார். மேற்படி தொகையினை குறித்து விசாரணை செய்த போது, இத்தொகையானது தனது வணிக ரீதியாக பயன்படுத்துவதற்கு காரில் வைத்திருந்ததாகவும், அதனை தனது மகன் பையுடன்

சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் ஆவணங்களுடன் தெரியாமல் எடுத்து வந்ததாக தெரிவித்தார். மேலும், இப்பணத்திற்கான சான்று ஆவணமாக ATM வங்கி பரிவர்த்தனை ஆவணத்தையும் சமர்ப்பித்தார். இதனை பார்வையிட்டதில் திருப்திகரமாக இருந்ததால், மேற்படி ரூ.35,800/- த்தை அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

10) மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தின் உள்ளே, சார் பதிவாளர் இருக்கைக்கு வலது பக்கத்தில் நின்று கொண்டு இருந்த ஒரு நபரை விசாரணை செய்ததில், அவரது பெயர் திரு.G.ராஜா, த/பெ கணபதி என்றும், No.6, வைரகுளம் சித்து ஓரகடம், அம்பத்தூர், சென்னை-51 என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், இன்று (04.06.2026) ஆவணம் பதிவு செய்ய வந்ததாகவும், மளிகை கடை வைத்துள்ளதாக தெரிவித்தார். மேலும் அவரை சோதனை செய்ததில், அவரது கைபையில் ரூ.65,000/- (அறுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) ஆஜர் செய்தார். மேற்படி தொகையினை குறித்து விசாரணை செய்த போது, இத்தொகையானது தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக கூறினார். அதற்கான ஆவணம் தன்னிடம் தற்போது இல்லை என்று கூறியததால், மேற்படி தொகையினை சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

வரிசை எண்.	ரூபாய் நோட்டுக்களின் விவரம்	மொத்தம் (ரூபாய்)
1.	Rs.500 x 130	Rs.65,000
	Total	**Rs.65,000**

11) மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தின் உள்ளே, சார் பதிவாளர் இருக்கைக்கு எதிரே நின்று கொண்டு இருந்த ஒரு நபரை விசாரணை செய்ததில், அவரது பெயர் திரு.S.பாபு, த/பெ சக்திவேல் என்றும், No.192. H.I.G. 13 வது குறுக்கு தெரு, நொளம்பூர், முகப்பேர் (மேற்கு), சென்னை என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், இன்று (04.06.2026) ஆவணம் பதிவு செய்ய வந்ததாகவும், பில்டராக உள்ளதாக தெரிவித்தார். மேலும் அவரை சோதனை செய்ததில், அவரது பேண்ட் பாக்கெட்டிலிருந்து ரூ19,000/- (பத்தொன்பதாயிரம் மட்டும்) ஆஜர் செய்தார். மேற்படி தொகையினை குறித்து விசாரணை செய்த போது, இத்தொகையானது தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக கூறினார். அதற்கான ஆவணம் தன்னிடம் தற்போது இல்லை என்று கூறியததால், மேற்படி தொகையினை சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

வரிசை எண்.	ரூபாய் நோட்டுக்களின் விவரம்	மொத்தம் (ரூபாய்)
1.	Rs.500 x 38	Rs.19,000
	Total	**Rs.19,000**

12) மேலும் இந்த அலுவலகத்தின் சார் பதிவாளர்/பொறுப்பு திரு.என்.ஆனந்த் அவர்களிடம் அலுவலக நிரந்தர இருப்புத்தொகை குறித்து கேட்டதற்கு பணம் ரூ.250/- (Rs.100 x 2 = Rs.200/- ; Rs.50 x 01 = Rs.50/-) எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் "எச்" பதிவேட்டில் சரிபார்த்து அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் பதிவுத் துறை தலைவர் சுற்றறிக்கை ந.க. எண்.6128/சி1/2019 நாள் 13.02.2019-ன்படி பணமில்லா பரிவர்த்தனை தொடங்கியதால் அலுவலகத்தில் ரொக்கமாக கட்டணம் எதுவும் வசூல் செய்யவில்லை என்றும் அதனால் "எச்" பதிவேட்டில் நிரந்தர வைப்பு தொகை தவிர வேறு பதிவுகள் எதுவும் செய்யப்படவில்லையென்று சார் பதிவாளர்/பொறுப்பு திரு.என்.ஆனந்த் தெரிவித்தார். மேலும் இன்றைய தேதியில் (04.06.2026) கொன்னூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் மொத்தம் 55 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 48 ஆவணங்கள் இருதுறை கூட்டு ஆய்வின் தொடங்குவதற்கு முன் பதிவு செய்யப்பட்டது. நிலுவையிலிருந்த 7 ஆவணங்கள் மட்டும் கூட்டு ஆய்வின் போது சுமார் 16.30 மணியளவில் மீண்டும் பத்திர பதிவு செய்யப்பட்டது. இந்த ஆவணங்கள் சார் பதிவக ஆவண எண். 3448/2026 முதல் 3487/2026 வரை பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு

வரிசை எண்	ஆவணங்களின் விவரம்	எண்ணிக்கை	பத்திர வருவாய் தொகை விவரங்கள் (ரூபாய்)
1	பொது அதிகார பத்திரம்	3	8,43,576.00
2	ரத்து பத்திரம்	3	1,403.00
3	அடமான பத்திரம்	14	4,82,115.00
4	விடுதலை பத்திரம்	2	1,03,000.00
5	விற்பனை ஆவணம்	25	1,72,19,234.00
6	உயில் ஆவணம்	1	2,500.00
7	உயில் ரத்து பத்திரம்	1	700.00
8	குத்தகை ஆவணம்	1	1,35,690.00
9	உறுதிமொழி பத்திரம்	1	1,700.00
10	தான பத்திரம்	4	1,85,400.00
	மொத்தம்	**55**	**1,89,75,318.00**

13) மேற்படி கூட்டு ஆய்வின் போது கீழ்கண்ட ஆவணங்களின் நகல்களை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

வ.எண்	விபரம்	மொத்த பக்கங்கள்
1	வருகைபதிவேடு 2026 கொன்னூர் சார்பதிவகம்.	3 தாள்கள்
2	வெளியூர் அனுப்புகை கொன்னூர் சார்பதிவகம்	2 தாள்கள்
3	தன்பதிவேடு 2026 கொன்னூர் சார்பதிவகம்,	2 தாள்கள்
4	தாமத வருகைபதிவேடு 2026 கொன்னூர் சார்பதிவகம்,	3 தாள்கள்
5	நிகழ்ச்சி குறிப்பு பதிவேடு 2026 கொன்னூர் சார்பதிவகம்,	4 தாள்கள்
6	தணிக்கை வருகை பதிவேடு 2026 கொன்னூர் சார்பதிவகம்,	4 தாள்கள்
7	இயக்கப்பதிவேடு 2026 கொன்னூர் சார்பதிவகம்,	2 தாள்கள்
8	தனிநபர் பண இருப்பு பதிவேடு 2026 கொன்னூர்	3 தாள்கள்
9	திருமண பதிவு பதிவேடு (சரிவர பராமரிக்கப்படவில்லை) 2026 கொன்னூர்	3 தாள்கள்
10	கொன்னூர் சார்பதிவகம் அலுவலகத்தில் 04.06.2026-ம் தேதி பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் விவரங்கள்.	3 தாள்கள்

14) இருதுறை கூட்டு ஆய்வின் போது எந்த உடமைக்களுக்கும், ஆவணங்களுக்கும் சேதம் ஏற்படவில்லை. கொன்னூர் சார் பதிவாளர் அலுவலக அன்றாடப் பணிகளுக்கோ பொது மக்களுக்கோ இடையூறு ஏற்படவில்லை. சோதனையின் போது பெண் காவல் ஆய்வாளர்கள் மற்றும் பெண் காவலர்கள் சோதனைக்கு உதவினர். இந்த சோதனை 04.06.2026-ம் தேதி 21.15 மணிக்கு முடிக்கப்பட்டது.

Sd/xxx
திரு.N.அறிவழகன்,
துணை ஆய்வு குழு அலுவலர்/
மண்டல துணை வட்டாச்சியர்,
தண்டையார்பேட்டை வட்டம்,
சென்னை - 600 081

Sd/xxx
திரு.N.ஆனந்த்,
உதவியாளர்/ சார்பதிவாளர்(பொறுப்பு),
சார்பதிவாளர் அலுவலகம்,
கொன்னூர்.

Sd/xxx
திருமதி.K.வளர்மதி,
காவல் ஆய்வாளர்,
நகர சிறப்பு பிரிவு-1,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

Sd/xxx
திருமதி.M.சசிரேகா,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு-2,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

Sd/xxx
திருமதி.M.பிரியா,
காவல் ஆய்வாளர்,
சென்னை நகர பிரிவு-1,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

Honored sir received the above complaint on 04.06.2026 at 21.30hrs. A discrete enquiry was caused against Tr.N.Anand, S/o Naganathan, Assistant, i/c SRO, O/o the Konnur SRO, Ambattur, Chennai-53 and confirmed about the corrupt activities. After getting oral orders from superior offiers today 11.06.2026 and a case in Cr.No.01/2026/AC/CC-I u/s 7 of Prevention of corruption (Amended) Act 2018 r/w 106 BNSS was registered in CSU-IDatachment at 12.45 hrs and took up investigation. The orginal FIR along with the

1. Complaint vide Proceeding No.98/Inspn/2026 Dated:04.06.2026
2. Proceeding drawn by Tr.N.Arivazhagan, Deputy Inspection Cell Officer during joint surprise check on 04.06.2026 between 15.30 hrs to 21.15 hrs.
3. Orginal Tamil Statements of
    i) Tr.G.Raja, S/o Ganapathi.
    ii) Tr.S.Babu, S/o Sakthivel.
4. An unaccounted cash of Rs.84,000/- seized during the joint surprise check is submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Thiruvallur.

(K.Valarmathi) 11/06/26
Inspector of Police,
City Special Unit-I,
Vigilance and Anti Corruption,
Chennai-16.